# பாதை

அழகியதோர் நீண்ட நெடும் பாதை
தினம் தினம் அதன்வழி நீள்பயணம்
இருபுறமும் நிழக்குடையாய் அடர்மரங்கள்
அவை உடன் பிறந்து கூடியிருக்கும்
பசுங் கிளைமை;

மரங்களின் அடர்த்தியிலே
வான்வெளி மறைந்து போகும்
இவ்வியற்கை நேர்த்தியிலே
நான் என்ற எண்ணம் பறந்து போகும்;

ஜில்லென்ற காற்றினிலே
வெந்த மனமும் குளிர்ந்து போகும்
மலர் மணமும், மரமணமும்
மண்மணமும் சேர்ந்து குழைந்து
சொர்க்கத்தின் வாசம்
கொண்டு வந்து சேர்க்கும்;

போகப்போகத் தொடர்ந்திடும்
முடிவிலா இவ்வினிய பயணம்
தொடருமோ இனி வரும் பல நாளும்...

அ. சௌ
பெங்களூர்
ஆகஸ்டு 1993.